**அனுப்புநர்**

திருமதி.K.P.மகேஸ்வரி, M.A., B.Ed.,
இணை இயக்குநர் (பணியாளர்),
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

1. தென்காசி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, மயிலாடுதுறை, செங்கல்பட்டு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. இணை இயக்குநர் (கல்வி) புதுச்சேரி
3. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

**ந.க.எண். 006352/பி1/2025** **நாள்: 01.08.2025**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – பத்தாம் வகுப்பு துணைத் தேர்வு ஜூலை 2025 – விடைத்தாள் நகல் விண்ணப்பங்கள் பெறுவது மற்றும் ஆன்–லைனில் பதிவேற்றம் செய்வது குறித்த அறிவுரைகள் – தொடர்பாக.

**பார்வை :** இவ்வலுவலக செய்திக் குறிப்பு, நாள். 29.07.2025.

-----

பார்வையில் காணும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு ஜூலை 2025, பத்தாம் வகுப்பு துணைத் தேர்வு எழுதிய தேர்வர்களுக்கு 31.07.2025 பிற்பகல் 2.30 மணி முதல் தேர்வு முடிவுகள் தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்களாக பதிவிறக்கம் செய்து கொள்வதற்கும், அதன் தொடர்ச்சியாக, விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் 04.08.2025 **(திங்கட்கிழமை)** **மற்றும்** 05.08.2025 ( **செவ்வாய் கிழமை**) ஆகிய நாட்களில் **காலை 10.00 மணி** முதல் **மாலை 5.00 மணி வரை** சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கும், புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களில் (தென்காசி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, மயிலாடுதுறை, செங்கல்பட்டு) முதன்மைக்கல்வி அலுவலர் அலுவலகத்திற்கும் நேரில் சென்று உரிய கட்டணத்தை பணமாக செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

..2..

விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பிக்க வருகை புரியும் தேர்வர்களிடம் விண்ணப்பங்களைப் பெறுவது மற்றும் ஆன்லைனில் பதிவேற்றம் செய்வது குறித்து கீழ்க்கண்டவாறு அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

- www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, NOTIFICATION பகுதியில் SSLC Examination என்ற வாசகத்தை " Click " செய்தால் தோன்றும் பக்கத்தில் "SSLC JULY-2025 SCAN COPY APPLICATION" என்ற வாசகத்தினை Click செய்து வெற்று விண்ணப்பத்திணைப் பதிவிறக்கம் செய்து தேவைப்படும் நகல்களை எடுத்துக் கொள்ளவேண்டும்.

- தேர்வர்கள் விடைத்தாள் நகல் கோரி வரும்பொழுது, அன்னாரிடம் ஒரு படிவத்தை அளிக்க வேண்டும். எந்தெந்த பாடங்களுக்கு விடைத்தாளின் நகல் தேவை போன்ற விவரங்களை தேர்வர்கள் பூர்த்தி செய்யுமாறு அறிவுறுத்தி அப்படிவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். விடைத்தாள் நகலுக்குரிய தொகையினைப் பணமாக பெற்றுக் கொள்ள வேண்டும்.

<u>விடைத்தாள் நகல் (Scan Copy of the Answer Script) கட்டணம்:</u>

ஒவ்வொரு பாடத்திற்கும் – ரூ.275/-

- **விடைத்தாள் நகல் பெற்ற தேர்வர்களுக்கு மட்டுமே மறுகூட்டல் / மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்படும்.**

- தேர்வர்களிடமிருந்து பூர்த்தி செய்த படிவத்தையும், கட்டணத் தொகையினையும் பெற்றவுடன், படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விவரங்களை தேர்வர்களிடம் **தவறாமல் உறுதிப்படுத்திக் கொண்ட பின்னரே** www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் தங்களுக்கான USER ID & PASSWORD-ஐ பயன்படுத்தி அவ்விவரங்களைப் பதிவேற்றம் செய்ய வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்தினையும் பதிவேற்றம் செய்து, அதற்கான ஒப்புகைச் சீட்டினை சம்பந்தப்பட்ட தேர்வர்களிடம் வழங்குதல் வேண்டும்.

- விண்ணப்பிப்பதற்கு இறுதி நாளான <u>05.08.2025</u> அன்று விண்ணப்பிக்கும் நேரம் முடிவடைந்தவுடன், FINAL SUMMARY REPORT / FINAL DETAILED REPORT என்ற பகுதியினை click செய்தால் தங்கள் அலுவலகத்தில் விடைத்தாள் நகலிற்கு விண்ணப்பித்த தேர்வர்கள் விவரங்கள், விண்ணப்பித்த பாடங்கள், பெறப்பட்ட கட்டணத்தின் மொத்தத் தொகை ஆகிய விவரங்கள் தெரியவரும்.

- விடைத்தாள் நகல் விண்ணப்ப கட்டணத் தொகையினை www.karuvoolam.tn.gov.in இணையதளத்திற்கு சென்று இணைப்பில் காணும் வழிமுறைகளை பின்பற்றி கீழ்க்காண் கணக்கு தலைப்பு மற்றும் துறை விவரங்களை பயன்படுத்தி செலுத்திட வேண்டும்.

| | |
|---|---|
| District | PAO (South) Chennai |
| Department receiving receipts | 04304 Directorate of Government Examinations |
| DDO Name | 41010118 Accounts Officer |
| கணக்குத் தலைப்பு | 0202 01 102 AA 22711-Copying/ Scanning |

அனைத்து உதவி இயக்குநர்களும் மேற்கண்டவாறு தனித்தேர்வர்களின் விடைத்தாள் நகல் விண்ணப்பக் கட்டண தொகையைச் செலுத்திய பிறகு பெறப்படும் Payment Receipt மற்றும் FINAL SUMMARY REPORT ஆகியவற்றினை இணைத்து திரு.கோ.சுரேஷ்ராஜா, துணை இயக்குநர் (பொது) (பொ), அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 என்ற பெயரிட்ட முகவரிக்கு பதிவஞ்சல் வழியாக <u>08.08.2025–க்குள்</u> அனுப்பிவைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**திருநெல்வேலி, விழுப்புரம், வேலூர், நாகப்பட்டினம், காஞ்சிபுரம் மாவட்ட உதவி இயக்குநர்கள் முறையே தென்காசி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, மயிலாடுதுறை, செங்கல்பட்டு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து Payment Receipt மற்றும் FINAL SUMMARY REPORT ஆகியவற்றினை பெற்று மேற்காண் முகவரிக்கு அனுப்பிவைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**<u>இணைப்பு:</u>** விடைத்தாள் நகல் கட்டணத் தொகையை இணையதளத்தில் செலுத்துவதற்கான வழிமுறைகள்.

**ஒம்/–**
**இணை இயக்குநர் (பணியாளர்)**

**<u>நகல்:</u>**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
3. பி3, அ3 பிரிவு (அலுவலகம்).